# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1719/22 - 2011 අගෝස්තු 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.08.18

*1719/22 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்**
**(இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்)**

**1. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7, 10, 11 மற்றும் 15 ஆம் நியதிகளில் அனுமதி :**

(அ) திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி தொழிற்படுகின்ற கூறுநம்பிக்கைகளில் உள்ள கூறுகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் பொருந்தத்தக்க விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423) ஆம் பிரிவுகள் 10, 11 மற்றும் 15 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, 2 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் (இலங்கைக்கு வெளியேயுள்ள வதியும் இலங்கையர்கள் உட்பட) ஆகியோருக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது ;

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் நோக்கங்களுக்காக, ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அல்லது மேலேயுள்ள துணைப்பந்தி (அ) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வரவு வைப்பதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுவதுடன், அத்தகைய கொடுப்பனவுகள் பந்தி 2 (இ) இன் நிபந்தனைகளுக்கிணங்க மட்டுமே மேற்கொள்ள முடியும்.

**2. நிபந்தனைகள் :**

(அ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களின் ஒரு தரப்பினராக இருக்கும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர் கூறுகளின் கொள்வனவுகளுக்கான விண்ணப்பப்படிவத்தில், அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் என்பதனை நிரூபிக்கும் பிரகடனமொன்றினைச் செய்தல் வேண்டும் ;

(ஆ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கூறுகளின் வழங்கலினை கொள்வனவு செய்வதற்காக அல்லது கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டு கணக்கிலிருந்து அல்லது கணக்குகளுக்கும் மட்டுமே மேற்கொள்ள முடியும் ;

(இ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான மீட்புப் பெறுகைகள், விற்பனைப் பெறுகைகள் அல்லது பணங்கள் அல்லது தரகுகள் போன்ற பணத்தின் கொடுப்பனவுகளின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கம்பனி, நம்பிக்கைப் பொறுப்பாளர், உரிமம்பெற்ற வர்த்தக வங்கி, உரிமம்பெற்ற தரகர் அல்லது மற்றைய எவரேனும் ஆள் அத்தகைய கொடுப்பனவுகளை மேலேயுள்ள துணைப் பந்தி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு செய்யலாம் அல்லது அதிலிருந்து மட்டுமே கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம் ;

(ஈ) கூறு உடைமையாளர்கள் அல்லது ஏதேனும் கூறு நம்பிக்கைகளினால் வழங்கப்படும் அல்லது மாற்றல் செய்யப்படும் கூறுகளின் பதிவேடுகளைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கம்பனியொன்று அல்லது வேறு எவரேனும் ஆள், வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் உட்பட) அல்லது அவர்களது நியமனத்தர்களை இவ்வறிவித்தலின் நியதிகளுக்கிணங்க அத்தகைய வழங்கல் அல்லது மாற்றல்களுக்கு ஏற்புடைத்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப அத்தகைய ஆட்கள் திருப்பதிரகமான சான்றுகளை சமர்ப்பித்தாலொழிய அத்தகைய கூறு நம்பிக்கைக் கூறுகளின் உடைமையாளர்களாக பதிவு செய்தலாகாது.

*3.* **விளக்கம் :**

(அ) "கூறு நம்பிக்கை", "முகாமைத்துவ கம்பனி", "நம்பிக்கைப் பொறுப்பாளர்", "கூறு நம்பிக்கை உடைமையாளர்" என்பன திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் அதே கருத்துக்களைக் கொண்டிருக்கும் ;

(ஆ) "இலங்கையில் வதியும் ஆள்", "இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்" என்போர் 1972.04.21 ஆந் திகதியிடப்பட்ட 15007 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டவாறான அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.**

கொழும்பு,
2011, ஓகத்து 18.

9- 100

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.